


எல்லா நலமும் எனக்கே கொடுக்கின்றான்
எல்லாம் செயவல்லான் எம்பெருமான்—எல்லாமாய்
நின்றான் பொதுவில் நிருத்தம் புரிகின்றான்
ஒன்றாகி நின்றான் உவந்து.

இராமலிங்க சுவாமிகள்.

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

# பாலவிநோதினி

அல்லது

# குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை


தாகுதி 7 | 1925 ௵ ஜனவரீ ௴ | பகுதி 1


## தெய்வ வணக்கம்

மாமுதல் தடிந்து தண் மல்குகிரி யூடுபோய்
வலியதானவர் மார்பிடம்
வழிகண்டு கமல பவனத்தனைச் சிறைவிட்டு
மகவான் றனைச் சிறைவிடுத்
தோம விருடித் தலைவராசி பெற்றுயர் வானின்
உம்பர் சொற்றுதி பெற்றுநா
உடைய கீரன் றனது பாடல் பெற்றுலகு தனில்
ஒப்பில் புகழ் பெற்றவை வேல்
சோம கலசப்ரபா லங்கார தரஜடா
சூடிகா லாந்த காலா
துங்க ரக்ஷகத்ரோண கட்க குலிசஞ் சூல
தாரகே சரமாம்பரச்
சேம வடவாம் புயப் பரணசங்காபரண
திகம்பர த்ரியம் பக மகா
தேவநந்தன கஜானன சகோதரன் குகன்
செம்பொற் றிருக்கை வேலே

அருணகிரிநாதர் அருள்வாக்கு

# ஏழாவதாண்டு விஜயம்.

மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் நல்ல நீதி நெறிகளைக் கற்றுக்கொள்வது இன்றியமையாத கடமைகளுள் ஒன்றும். நீதி ஒன்றே ஒருவர் இன்னொருவரிடத்தில் நடந்து கொள்ள வேண்டிய முறையைக் காட்டுவது. இதனைத் தெரிந்து கொள்ளாமல் வாழ்வது மனிதவாழ்வாகாது. நீதி இல்லாத கல்வி சத்தில்லாத உணவிற்குச் சமானமாகுமென்பதில் ஐயமில்லை. உணர்ச்சி யுடையவன் சத்தில்லாத உணவை உண்ணப் பிரியப்படுவானா?—

சிறுவர்களுக்குப் பாடசாலைகளில் உபாத்தியாயர்களும் வீடுகளில் தாய் தந்தையர்களும் நீதி நெறிகளைக் கற்பிக்க வேண்டியது அவர்களுடைய கடமையாகும். நீதி நெறியே நாகரிகாபிவிருத்திக்கு அஸ்திவாரம். மக்களை நீதி நெறியில் பயிற்றுவது சுளுவான காரியமல்ல. அது மனத்திலே பதிவது சிறிது கஷ்ட சாத்தியமாகும். ஆகையால் அதனை, சிறு சிறு கதைகள் மூலமாக விளக்குவதுதான் தக்கதொரு வழியாகும். கதைகள் சுலபமாயும் உவமான உவமேயங்களுடன் சந்தர்ப்ப உணர்ச்சியைச் சிறுவர்களுக்கு உணர்த்தக் கூடியனவா யிருத்தல் வேண்டும். கதைகளைக் கேட்கவும் பிறர்க்குத் தாமே எடுத்துச் சொல்லவும் சிறுவர்கள் பிரியப்படுவார்கள். ஆகையினால் நீதி நெறியை இதனோடு கலந்து போதிப்போமானால் அது நல்ல பயனை விளைக்கும் என்பது நமது பெரியோர் கொண்ட கொள்கையாகும். ஆதலின் நாலும் அதனையே உலகுக்கு இயன்ற வரையில் உதவ முன் வந்து கடந்த ஆறு வருஷ

காலமாக உழைத்து வருகிறேன். பரம கருணா நிதியாகிய செந்திலாண்டவன் திருவருளாலும் என் குருநாதனாகிய திரு. அ. சிவானந்தசாகர யோகீசுவரருடைய ஆசீர்வாதத்தினாலும் மற்றும் திருவருளே திருமேனியாகக் கொண்ட பெரியார்களுடைய ஆசீர்வாதத்தினாலும் என்னை இச் சென்னையிலும் வெளியூர்களிலும் ஆயிரக் கணக்கான கனவான்கள் ஆதரிக்க முன் வந்திருப்பது பற்றி நான் ஸந்தோஷ மடைகிறேன். அவர்களுக்கு என் மனமார்ந்த வந்தனம் செலுத்துகிறேன்.

நான் இன்னும் சில அலங்காரங்களுடன் வெளி வந்து உங்களுடைய வீட்டுச் சிறுவர்களுக்குப் போதிக்க விரும்புகிறேன். ஆதலால் அன்பர்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் என்னைப்பற்றி உங்களுடைய நண்பர் கட்குச் சொல்லி அவர்களையும் இந்த அரிய உதவியிலே ஈடுபடும்படி தூண்டுமாறு வேண்டுகிறேன். இது தேச உபகாரியாகிய உங்களைப் போன்றவர்களுடைய கடமை யென்பதை நீங்களறிவீர்களாயினும், தூண்டுவது என் கடமையாதலால் வருஷ ஆரம்ப மானதுங் கொண்டு சம் நினைப் பூட்டினேன். சுடர் விளக்காயினும் தூண்டு கோல் வேண்டுவது அவசியமன்றோ?

(பால விநோதினி.)

## தமிழ் நாட்டின் பெருமை.

வேதம் நிறைந்த தமிழ் நாடு—உயர்
வீரம் செறிந்த தமிழ் நாடு
காதல் புரியும் அம்மையர் போல்இளம்
கன்னியர் சூழ்ந்த தமிழ் நாடு (பாரதி)

---

## இன்சொல் இன்பம் பயக்கும்.

நாவின் நுனியில் நயமிருக்கில் பூமாதும்
நாவினிய நல்லோரும் நண்ணுவார்—நாவின் நுனி
ஆம் கடுமை யாகில் அத்திருவும் சேரான் முன்
ஆங்கே வரும் மரணம் ஆம் (நீதி வெண்பா

# வித்தை விரும்பு.

குழந்தைகளே பாண்டவ
யோதனாதியரும் பங்காளி
யால், துரியோதனன்
பாண்டவரைப்பகைத்து வ.
விதத்திலும் அவர்களை
ஒழித்து விட வேண்டுமென
ணினான். தன் எண்ணத்திற்
பம ப சகுனியைத் ணையாகக் கொ
ரச் சூதில் வென்று அவர்களைப் பன்
கம் காட்டில் வசிக்கவும், அப்பால் ஒரு
ஞாதவ சம் செய்யவும் ஏற்பாடு செய்தா
வாச டெ ன்றால் தங்களை ஒருவரும்
அறிந்து ள்ளாத படி வசிப்பதாம்.

பாண்டவர்கள் வனவாசங் கடக்
வாசஞ் செய்வதற்கு, விராடதேசத்தை
விராடதேசம் புகும்போது, "நாம் எட
பிரவேசிப்பது ; நம்மை இன்னவர்களென
தெரிந்து கொள்ள மாட்டார்களா ? அ
பகைவன் வசம் சிக்கிக்கொள்ளுவோ
பகைவர் நம்மைக் கண்டு கொள்ளாதப
யம் யாது ? அதை யல்லவோ இப்பே

க றியவேண்டும்" என்று ஒன்று கூடி ஆலோசிக்கலுற் ய ளர். சிறிது நேரம் இப்படி யோசித்து ஒரு தீர் மானத்து ..ருக்கு வந்தனர்.

ஆசீர்வா ..புத்திரர் தமது தம்பிமாரை நோக்கி "சகோ யாகக் ..கல்வி கற்ற நமக்கு எவ்விதக் கவலையும் வரக் ..ணும் எ..லை. கல்விப் பொருள் நம்மிடங் குடி கொண் ஆயிரக் க..போது எக்காரியந் தான் சாதிக்க முடியாது! பது பற்.. நிலைபெறச் செய்வதும், பொருள் வரவை எளி களுக்கு ..டுபண்ண வல்லதும், இன்பத்தைக் குறைவற நான் வந்து உ.. க வைப்பதும், முடிவில் முத்தியின்பத்தைத் விரும்.. ..யதும் இதுவேயன்றி வேறேது? இத்துணைச் ..ப்பு வாய்ந்த மெய்ப்பொருளை யுடைய நாம் துன்பத் ..டுபடும். ..ஞ்ச வேண்டுவது அநாவசியம். நமக்கு நாடும் தேச உ.. ..டும் ஒன்றே. க.. ..ற் பெறாத சுக.. நாட்டி கடமை .. ..வ்வளவு விசேஷித்திருக்கிறது? பண்..ட்டு என் கட.. ..டே வாசமாயிருந்த நாம் .. சம் நினைப ..ி கடைப் படலானோம்? உ.. ..ா உய.. கொல் வே.. ..ார்க்கு எங்கும் உண்டு. ..தலால் நாம ..வாழவேண்டிய வருஷம் ஒ.. ..றயும் இந்த ..லேயே கழித்துவிடுவோம். இது மிருதியுஞ் ..பாருந்திய தேசம்; வளங்களெல்லாம் நிரம்பப் .. அரசனுகிய விராடபூபனோ மிகவும் நல் க.. ..களைத் தன்னுயிர்போல் காக்குந் தன்மை இவ் ..நிலத்திருக்கின்றது. இங்கிருப்பதால் நாவி.. ..ாரு இழிவும் ஏற்படாது" என்று சொல் நாவி..

ஆம் .. ஆங்.. ..ிகளைக் கேட்ட தம்பிமார்கள், இதுவே

உரிய உபதேசம் என்று, தமயனார் விருப்பத்தின்படி. ஒவ்வொருவரும், தங்களுக்குள்ள கல்விஞானத்தால், தனித்தனி வெவ்வேறு வேஷம் பூண்டு, அவ்வேஷத்துக் கேற்ற ஒழுக்கமும் பெற்றனர். தங்களை யொருவருஞ் சந்தேகியாதபடி விராட ராஜனிடம் மிக்க கௌரவமாகவே இருந்து வந்தனர். இவர்களைப் பாண்டவரென்று அறிவதற்கு எவராலும் சாத்தியமாகவில்லை. சுகமாகத் தாங்கள் கழிக்கவேண்டிய காலத்தை இத்தேயத்தின் கண் கழித்தனர்.

இதனால் கல்விக் கடலின் மகத்துவம் கரை கடந்த ..று காண்கிறோம். ஆறறிவுடைய மானிடர்க்கு ..ரிய அணிகலனாவது வித்தையே. வித்தையற்றவர் சத்தை (சத்து-அறிவு) யற்றவராவர். சத்தில்லாதவர் எத்தன்மையோராயினும் அவர்களை விட்டுச் சஞ்சலம் ஒரு போதும் நீங்காது. உள்ளே வயிறெரிய உதடு பழஞ்சொரிய நடையாடி, பணியாமுடி படைத்த பாம்புக் கொடியோனாகிய துரியோதனன் கெட்டது அஞ்ஞானத்தினாலல்லவா? பொருட்செல்வம் இருந்தும், அருட்செல்வத்திற்கு ஆதாரமாகிய வித்தையைத் துரியன் ஐயந் திரிபறக் கல்லாமையால் அவனை அஞ்ஞானம் பற்றிக்கொண்டது. அவ்வித்தை பாண்டவரிடம் பூர்ணமாய்த் தங்கியிருந்தபடியால் அவர்களை மெய்ஞ்ஞானம் மேன்மையுறச் செய்தது. கல்வி வளங் கைவரப் பெற்றவரை, அது .தப் பமுடியாத ஆபத்து வேளையிலும் தக்க யுக்தியைத் தந்து தப்புவிக்கும்.

சில வருஷங்களுக்குமுன் ஒரு கவிராயர், தரித்திரக் கொடுமையால் தவிப்புண்டு உண்ண உணவும் உடுக்க

உடையு மற்று உடல் முழுதும் உரோமத்தால் மூடப்பெற்றவரானார். இவர், புதுச்சேரியிலிருந்த பிரபு ஒருவரைக் காணப் போயினர். "இரக்கப்போனாலுஞ் சிறக்கப்போ" என்னும் பழமொழி மேற்படி கவிராயர்க்குத் தெரிந்திருந்தும், வழியில்லாததனால் "இடுங்குணமுடையோர் ஏழைகளைக் கவனிக்காது விடார்" என நம்பி ஏழ்மைத் தன்மையராகவே சென்றார். அத்தருணம் பிரபு வெளியே சென்றிருந்தார். அவர் வரவை எதிர்பார்த்துக்கொண்டு கவிராயர் ஆங்கோரிடத்தில் இரண்டு முழங்காலையும் இரண்டு கைகளாலும் இறுகக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அவரிருந்த தோற்றம் கவிராயரை (ஆஞ்சநேயரை)ப் போலவே காணப்பட்டது. அச்சமயம் வந்த பிரபு கவிராயரைப் பார்த்து "குரங்கன் யார்?" என்று கேட்டார். உடனே கவிராயர் வணக்கமாய் "பிரபுவே! அடியேன் ஸ்ரீராமபிரான் விடுக்க வந்த கவிராயன்; இங்கு சீதை வசிக்கிறாளோ இல்லையோ என்று தெரிந்து வரும்படி உத்தரவிட்டார்" என்றார்.

இவ்வசனங் கேட்டதும் பிரபு திடுக்கிட்டு "யாரோ பெரியவர்; அவசரப் பட்டு அவமதிப்புற்றோம்" என்று நினைத்து அவரை வணங்கி உபசரித்து அவரிஷ்டப்படி அவரை ஆதரித்தனுப்பினார். பிரபு கேட்ட கேள்விக்குக் கவிராயர் சொன்ன விடையைப் பார்த்தீர்களா? இந்த யுக்தி சமயோசிதமானதன்றோ? இதைத் தகுந்த காலத்தில் உதவியது எது? கல்வி. இப்படிப்பட்ட அதிசயமான விஷயங்கள் பலவுண்டு. அவற்றைச் சிறிது சிறிதாக வெளியிட்டு வருவோம். இப்போது தருமம், பொருள், இன்பம், மோக்ஷம் என்பனவற்றை அளித்து மக்களை ரக்ஷிக்கத் தக்கது கல்வி என்று தெரிந்துகொண்டோம். ஆதலாற்றான், ஔவை நம்மைப் பார்த்து "வித்தை விரும்பு" என்று கூறினாள்.

வித்தை என்னும் பதம் பலவகைப் பொருளதாயினும் இங்குக் கல்வி ஒன்றையே கருதி வந்தது.

# பட்டினத்தார் சரித்திரம்.

(353-ம் பக்கத் தொடர்ச்சி.)

திருவெண்காடர் முத்துக்கு விலைகூறிக் கொண்டிருந்த சமயம் மருதவாணர் வந்து, "இம் முத்து ஏது? யார் கொண்டு வந்தது? இதன் விலையென்னவோ?' என்று கேட்டார். திருவெண்காடர், "சிறு பிள்ளையாகிய உனக்கு இதைப் பற்றி யென்ன விசாரம்? நீ போய்ப் படி" என்றார். மருதவாணர், "தாங்கள் கூறிய படி சிறு பிள்ளையாகிய நான் படிப்பிலே கவனம் செலுத்த வேண்டியது நியாயந்தான். ஆயினும் உலகத்திலுள்ள பொருள்களின் உண்மையறிதலும் கடனுமாதலால், விசாரித்தேன். நீங்கள் விலைக்கு வாங்க இருக்கும் இம்முத்தில் நான் ஒரு விசேஷம் காண்கிறேன். அதைக் கூற விரும்புகிறேன்" என்றான்.

திருவெண்காடர் மன மகிழ்ந்து முத்தை மருதவாணரிடம் கொடுத்தார். மருதவாணர் அதனைக் கையில் வாங்கிப் பார்த்து பின் முத்து வியாபாரியைப் பார்த்து, "ஐயா, எந்தையார் இதற்கு விலை கூறியபடி பதினாயிரம் பொன் நானே இதற்குத் தருகிறேன். இந்த முத்து, கண்ணாலே கூடப் பார்க்கத் தக்கதன்று. இதனுள்

நிறைந்துள்ளது: இது ஆணி முத்தல்ல, இதனைக் கரத்தினால் தொட்டாலும் வறுமை நோய் வரும்'' என்று கூறி அதைக் கரத்தினால் அதுக்கினார். அம்முத்து உடைந்து அதிலிருந்து நீர் வெளிப்பட்டது. எல்லோரும் கண்டு வியப்புற்றனர். முத்து வியாபாரியும் பிரமித்து நின்று விட்டான்.

மருதவாணர் உடனே, ஒரு சிறு ஓலை எழுதி, முத்து வியாபாரியிடம் தந்து "இதைக் கொண்டு போய், கடார புரத்து ஞானநந்தரிடம் கொடும். அவர் உமக்குத் தொகை கொடுப்பார்'' என்றார். வர்த்தகன் இந்த முடங்கலைப் பெற்றுக் கடார புரம் போய் ஞானநந்தரைக் கண்டு வணங்கிக் கொடுத்தான். அவர் கடிதம் கண்டதும் வர்த்தகனை உபசரித்து அவனுக்குக் கடிதத்திலே கண்டிருந்த தொகையைக் கொடுத்து அனுப்பினார். இதைக்கேட்டதும் யாவரும் வியப்படைந்தனர். அப்பால் மருதவாணரிடம் யாவரும் கொஞ்சம் அச்சமும் மதிப்பும் வைக்கலாயினர்.

## மருதவாணர் வாணிபம் செய்யக் கப்பலேறிச் சென்றது.

மருதவாணருக்குப் பதினாறு வயதாயிற்று. அப்பொழுது ஒரு நாள் மருதவாணர் திருவெண்காடரை நோக்கி, "ஐயரே, ஊரிலுள்ள வணிகமக்கள் வர்த்தகம் செய்யத் தீவாந்தரம் செல்கின்றனர். நானும் அவர்களுடன் போய் வியாபாரம் செய்து வருகிறேன். "திரை கடலோடியும் திரவியந்தேடு'' என்பது கட்டளையல்லவா? இந்த இளம் பிராயத்தில் பொருள் தேடாவிடில் முதுமைப் பருவத்தில் நாம் என்ன செய்ய முடியும்.? எனக்

கும் போய் வர விடை தரவேண்டும்" என்று கேட்டார்.

இதைக் கேட்டதும் திருவெண்காடர், "அப்பா மருதவாணு, நீ யேன் தீவாந்தரம் போகவேண்டும்? உனக்குப் பணமில்லையா? வேண்டிய செல்வம் நிரம்பியிருக்க, கடலேறிச் சென்று வருத்தப்பட்டுப் பொருள் தேட வேண்டுமென்பதில்லையே! நீ எவ்வளவு காலம் உன் மனம் கொண்டமட்டும் செலவு செய்யினும் குறைவுறாத செல்வம் நமக்கிருப்பதை நீ யறியாய். ஆதலின் நீ போகவேண்டாம். மேலும் உன்னைப்பிரிந்து நான் ஒரு கணமுமிருக்கமாட்டேன். அன்றியும் நீ உலகியலறியாத சிறுவன். உன்னை அனுப்ப நான் எப்படி துணிவேன்?" என்றார்.

மருதவாணர், "இதைக் கேட்டதும், நகைத்து, "எந்தையே, தாம் கூறியவையாவும் உண்மையே. ஆனாலும் உலக இயல்பு அறிய வேண்டியது ஒவ்வொருவனுடைய முதற் கடமையாகும். அந்த முதற் கடமையைச் செலுத்த இதுவே தக்க பருவமாகும். இந்தப் பருவத்தில் அதனை நிறைவேற்றி உலகியல்புணருவேனானல் பின்னர், தரும இயலும் கடவுள் அருளியலும் உணர்தல் எளிதிலே கைகூடும். பலதேசம் போய் வருவதாலும், கற்றுத் தேர்ந்த புலவர் கூட்டத்திலே சேர்ந்து பழகுவதாலும், நல்ல நடவடிக்கைகளை மேற்கொண்ட நட்டினரோடு உறவாடுவதாலும், இராஜ சபையிலே போ அங்கு நடப்பதைக் கவனிப்பதாலும் உலகியல் அறிதல் கூடும். இந்த நெறியை மேற்கொள்ளத் தக்க பருவம் இதுவேயல்லாது வேறல்ல. இதனைத் தாமறியாதவர

ல்ல. அறிந்திருந்தும் என்னை அனுப்பத் தயங்குவது பிள்ளை என்கிற அன்பினாலென்று அறிகிறேன். அண்ணலே, முன் தசரதன் விசுவாமித்திர முனிவரோடு தன் ...கிய இராமலக்ஷ்மணரை அனுப்பியதை நினைத்துப் பாருங்கள். எதை எந்தக்காலத்தில் செய்யவேண்டுமோ அந்தக் காலத்திலே அதனைச் செய்யத் தவறுவது கூடாது. ‘அகாலப்பயிரும் அன்னையப்ப னில்லாப் பிள்ளையும் அல்லற்படும்’ என்று பழமொழி வழங்குகிறதன்றோ?’ என்று கூறித் தம்மை அனுப்ப விடை தரும்படி கேட்டார்.

திருவெண்காடர், ‘இவனுடைய உள்ளம் வர்த்தகம் செய்வதில் உறுதிகொண்டிருக்கிறது. இவனை நாம் தடுத்தால் இச்சமயம் பயன்படாது” என்றெண்ணி, “மருதவாணா உன் எண்ணம் நல்லதுதான். ஆயினும் உன்னுடைய வயதை நோக்கி உன்னை அனுப்ப மனம் வராமல் கலங்குகிறேன். ஒரு காரியம் செய்யலாம். நானும் உன்னுடன் வருகிறேன். இருவரும் சேர்ந்து போகலாம்” என்றார்.

மருதவாணர், “எந்தையே, நாம் இருவரும் போவோமானால் அன்னையார் நமது பிரிவைச் சகிக்கமாட்டாமல் மெத்தவும் வருந்துவார். ஆதலால் என்னை மாத்திரம் அனுப்புங்கள். நான் சென்று பொருள்தேடி வருகிறேன். சிந்தனை செய்யாமல் அனுப்புங்கள்,’ என்று கேட்டார்.

திருவெண்காடர், மறுத்துப் பேச மனமில்லாமல் சற்று ஆலோசித்தவாறிருந்து, “ஆனால் போய் வா, சிவபெருமான் உன்னைக் காப்பாற்றுவார். அவரை மற

வாதே" என்று விடை தந்து பிரயாணத்துக்கு வேண்டிய சகல சௌகரியங்களையும் செய்து கொடுத்து ஒரு நல்ல நாளில், புதிய ஒரு கப்பலில் பிரயாணப் ... த்தி அனுப்பினர். மருதவாண... அவ... களும் சென்றனர்.

...ருதவாணர் புறப்படும் போது எல்லோ... சிவ ... ...ானைத் தியானித்து வணங்கி, "இவ... நல்ல ... ...பம் பெற்று சுகமாய்த் திரும்பவேண்டும்" என்று வாழ்த்தினர்கள்.

## மருதவாணர் வாணிபம் செய்து மீண்டது

இவ்வாறு மரக்கல மேறிச்சென்ற மருதவாணர், சில... ...ல் ஒரு தீபத்திற்குப் போய்ச் சேர்ந்தார். ...க போனதும் மருதவாணரின் நண்பர்கள் தாம் ...ருந்து கப்ப... நிறையக் கொண்டுபோன பண்டங்களை மாற்றி வேறுபண்டங்கள் பெற்று அவைகளை வேறு நாடுகளுக்குக் கொண்டுபோய் விற்பனை செய்வாராயினர். மருதவாணர் மாத்திரம் அந்தத் தீபத்திலேயே தங்கியிருந்து தாம் கொண்டுபோன பண்டங்களை விற்று வந்த பொருளினால், கோவில், குளம், தடாகம், ...டபம், சத்திரம முதலியவை கட்டி முடித்து ஏ... வேண்டிய உதவி செய்து வந்தார.

மருதவாணர் இங்கிப்படி யிருக்கையி... ...டைய நண்பர்கள் நெடுகலும போய் வியாபா... பொருள்கள் சேகரித்துக் கொண்டு சில ... கெல்லாம் திரும்பி மருதவாணரிடம வந்... ...தல் வியாபாரம் செய்து பொருள் தேடிய முறை... ...நவம் லாம் கூறி மகிழ்ந்தார்கள். ...யாதவர

,பபால், "நீ என்ன செய்தாய்? இது வரையில் எவ்வளவு பொருள் சம்பாதித்தாய்?" என்று வின விஞர் ர். மருதவாணர் "என்னிடம் இப்போது ஒன் ருமாரா, பொருளை யெல்லாம் பல்வாறுய்ச் செலவழி த்து ட்டேன்" என்றார்.

வர்கள் "மருதவாணு, இதுதாஞ ரா ரம்? தாஞ வர்த்தைகளுடைய செய்கை?" ன் னுடைய தந்தை கேட்டால் நீ என்ன ட கூறுவ? பொரு ளைக் கொண்டு வந்து வீணுக்கலாமா?" என்று கேட்டார். மருதவாணர், "நண்பர்களே, நீங்கள் பொருளீட்டியிருக்கிறீர்களல்லவா? அதுவே போதும். என் தந்தை என்னைக் கோபித்துக் ொள்ளாதிருக்கும் வழியை நான் தேடிக் கொள்கிறேன். நீங்கள் ப் படவேண்டாம்" என்று கூறினர்.

இதைக் கேட்டதும், "என்ன காரணமோ தெரிய வில்லை. இவன் இப்படி மாறுபட்டுப் பேசுகிறன்". இவனை ஊர் கொண்டுபோய் இவனுடைய தந்தையிடம் ஒப்பு வித்து விட்டால் அதுவே பெரியதொரு காரியமாகத் தெரி கிறத" என்றெண்ணி எல்லோரும் புறப்பட்ட ருதவாணரும் தாம் சேர்த்துவைத்திருந்த வரட் த்துக்கொண்டு அவர்களுடன் அந்தத் தீபத் ப் புறப்பட்டார்.

லோருடைய கப்பல்களும் காற்று வாட்டமாய்ச் கொண்டிருக்கின்றன. அப்பொழுது மருத திருவிளையாடல் செய்யத் திருவுளங் கொண் சற்று டனே திடீரென வானத்தில் மேகம் சூழ்ந்து சிவபெரு பொழிந்தது. அதனோடு பெருங்காற்று

மடித்தது. அடிக்கவே கப்பல் களெல்லாம் திடீ. யோடித் திரிந்தன.

இப்படிப் பல நாள் புயலடித்தபடியால் கப்பலிலிருந் வர்கள் குளிரால் மெலிந்ததுமல்லாமல் உணவு முத லிய உபகரணங்கள் செலவழிந்துபோனபடியால் வருந்தி இன்னது செய்வதென்று தெரியாமல் திகைத்தார்கள். மருதவாணன் சிறிதும் கவலையில்லாம லிருப்பதைக் கண்டு அவர்கள் அவனைப் பார்த்து, "மருதவாணா, என்னடா இப்படி வந்து அகப்பட்டுக் கொண்டு தவிக் கும் இந்த வேளையில் நீ சிறிதும் கவலைப் படாமல் இருக்கிறாய்? இந்த ஆபத்திலிருந்து தப்புவதெப்படி? நீ ஏதாவது உபாயம் செய்யக்கூடுமானால் செய்" என்று வேண்டிக் கொண்டார்கள்.

மருதவாணன், "நானென்ன செய்யக்கூடும்? நான் என்னிடமிருக்கும் வரட்டியை வேண்டுமானால் தருகி றேன். நீங்கள் அதில் தீயை மூட்டி குளிர் காயுங்கள். ஆனால் அந்த வரட்டியினளவு பொருள் ஊருக்குப்போ னதும் எனக்குத் தந்துவிடவேண்டும்" என்றார்.

(வரும்.)

---

தயை கூர்ந்து சந்தாதார்கள் யாவரும் இவ் வருஷ சந்தாவை வழக்கம்போல் மணியார்டர் செய்து பத்திரிகையை ஆதரித்து வரவேண்டுகி றோம். (ப. ர்.)

# ஸ்ரீ ராமாவதாரம்

(344-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீ ராமபிரான் சீக்கிரத்தில் வந்து தங்களை மீட்டுக்கொண்டு போவதுடன் இந்த இலங்காபுரியை இங்குள்ளா ரோடு அழிப்பது நிச்சயம். நாங்களும் எங்கள் பராக்கிரமத்தைக் காட்டாமற் போகோம். இந்த வேடிக்கையைத் தாங்களே பார்க்கப் போகிறீர்கள். சிறிதும் கவலைக் கிடந்தர வேண்டாம்" என்று ஆஞ்சநேயர் சொன்னார்.

உடனே பிராட்டி அனுமந்தரைப் பார்த்து "ஐயா ? ஒரு சங்கதி. நாங்கள் சித்திர கூடத்திலிருந்தபோது இந்திரன் புதல்வனான காகாசூரன் என் அழகை நோக்கி என் மேல் காதல் கொண்டு என்னைப் பரிசிக்க வந்தான். அப்போது எனது நாயகர் ஒரு புல்லைக் கொண்டு அவனுடைய கண்களிரண்டையும் போக்கினார். அவன் தனக்கு நேர்ந்த ஆபத்தை நிவர்த்தித்துக் கொள்ளும் பொருட்டு பிர்மாதி தேவர்களிடஞ் சென்று முறையிட்டுக் கொண்டான். அவர்கள் அவனை வைது "நீ யுடனே சென்று இராகவனையே சரணடையக் கடவாய்" என்று அனுப்பி விட்டனர். அவனும் அவ்வாறே ஓடோடியும் வந்து "இராகவா அபயம் அபயம்" என்று அவருடைய

திருவடிகளில் வீழ்ந்து பணிந்தான். அவரும் அவன் செய்த பெரும்பிழையைப் பாராட்டாமல், இரக்கங்கொண்டு அவனுக்கொரு கண் கொடுத்தருளினார். தேவர்கள் இக்காருண்யத்தைக் கண்டு மலர்மாரி பொழிந்து துதித்தனர்.

அயோத்தியிலிருந்தபோது நான் என் உயிருக்குச் சமானமாக வளர்த்து வந்த கிளிக்கு "என்ன பெயரிடலாம்" என்று நானவரை வினவினேன். அதற்கவர் 'பெண்கள் நாயகமே! நீ இக்கிளிக்கு என் அன்பார்ந்த அன்னையாரான கேகய மகாராஜன் செல்வப்புதல்வியின் திருநாமத்தை யிடக்கடவாய்' என்று முகமலர்ச்சியுடன் சொன்னார். இவற்றை அவருக்கு நான் அறிவிக்கச் சொன்னதாகத் தெரிவி.

மற்றும் இதோ இதனைக் கைக்கொண்டேகி எனது அடையாளமாக நானளித்தேனென்று சொல்லி அவரிடம் கொடுப்பாயாக என்று தனது ஆடையினொரு புறம் முடிந்து வைத்திருந்த ஓராபரணத்தை அவிழ்த்தெடுத்தாள். அது யாவருடைய கண்களும் கூசும்படியான அவ்வளவு பிரகாசமாயிருந்தது. அநுமந்தரும் "நாமும் சூரிய பகவானிடம் சில நாள் இருந்தோம். அவனொளி நமது கண்களை மயக்கவில்லை. இதுவென்ன இப்படி ஒளி வீசுகின்றதே" என்று மயங்கினார். அங்கிருந்த இராக்ஷதக் கூட்டங்களும் தங்கள் கண்களை மூடிக்கொண்டு "ஓகோ! என்ன காரணத்தினாலோ சூரியன் நேரே இங்கு வந்து விட்டான்" என்று கூவினார்கள். குவிந்திருந்த தாமரை மலர்கள் மலரத் தொடங்கின. காந்தள்கள் குவியலாயின. இராமபிரானது திருவடி போலும் பிரகாசி




சீதாதேவி மாருதியிடம் சூளாமணி அளித்தல்

க்கும்படியான அவ்வாபரணத்தை வாயுபுத்திரர் கண்டார். "அம்மா ! இதென்ன" வென்றார். "அன்ப ! இது தான் எனது சூளாமணி. இதனை எனது நாயகரிடம் ...ாயாக" என்றனள். அஞ்சனைச் செல்வரும் ...ாக்கியம்" என்று அவ்வாபரணத்தைப் பெற்றுக் கொண்டு, பிராட்டியிடம் விடை பெற்றுத் திரும்பினர்.

அப்போது அவருக்கோர் எண்ணமுதித்தது. "நாம் இவ்வளவு தூரம் வந்தும் இந்த இழிசனர்களாகிய இராக்கதரை எதிர்த்து அவர்களெல்லோரை... இவ்வூரைச் சூழ்ந்துள்ள கடலில் தள்ளி, பிராட்... ஸ்ரீராமபிரானிடம் சேர்க்காமற் போவதால் அப்... ருமானுக்கு நாம் அடிமைபூண்ட தன் பலன் யாதாம்? பாவியான இராவணனை அவனது பததுத்தலைகளும் இருபது புஜங்களும இரத்தம் சிந்தும்படிச் சித்திரவதை செய்து சிறை செய்யாமல் திரும்புவதால், ஸ்ரீரகுநந்தனரும் நாமும் ஒருவர்க்கொருவர் தஞ்சம் என்பதுதான் பூர்த்தியாகுமோ? நமது பெருமாட்டிக்குக் கெடுதி நாடின தசக்கிரீவனுடைய மனையாளான மண்டோதரியைக் குழல் பிடித்திழுத்துச் சிறை செய்தாலாவது நமது அடிமைத்திறம் ஒருவாறு விளங்கும். அதுவும் செய்தோமில்லை. பிறகு எப்படித்தான் இவ்விராக்ஷதருக்குப் பகையை மூட்டி அவர்களை நம்மிடம் நேரில் வந்தெதிர்க்கச் செய்வோம். ஒன்றும் தோனறவில்லையே" என்று சிந்தித்தார், கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தார். இராவணன் மிகுந்த அருமையாகவும் செல்வமாகவும் பரிபாலித்து வரும இவ்வழகிய நந்தவனமான அசோகவனத்தைப் பாழாக்குவோமானல் அது தெரிந்து அரக்கர் கோபங்கொண்டு

நம்மை எதிர்க்க வருவார்கள். அப்போது அவர்களை நாம் சுலபமாக எமபுரம் சேர்க்கலாம். இந்தச் சூது மார்க்கத்தைத் தவிர அவர்களுடன் போர் விளைப்ப தற்கு வேறுவழியில்லை. அரக்கர்கள் மாளுவதைக் கண்டால் இராவணன் சும்மாவிரான். அவனே தம்மிடம் நேரில் வருவான். அவனையும் ஒரு கைபார்த்து விடலாம்" என்று எண்ணி அசோகவனத்தை அழிக்க லானார். வானத்தை யளாவியும், மிக்க அழகுவாய்ந் தனவும், விலையேறப் பெற்றவுமான பற்பல விசித்திர விருக்ஷங்களும் மாளிகைகளும் பாழ்படத்தொடங்கின. பலவிதமான மிருகக் கூட்டங்களும், பட்சிசாலங்களும் தங்கவிடமின்றித் தவித்து மாண்டன.

பிராட்டியைச் சூழ்ந்திருந்த அரக்கிமார்களனை வரும் "இதென்ன விந்தை. இப்படியும் நமது பொன் மயமான இலங்கைக்கு அழிவுநேருமோ?" என்று மனங் கலங்கினர். வாயுபுத்திரர் தமது புறங்களைத்தட்டிக் கொண்டு ஆரவாரித்தார். இதனைக்கண்ட இராவணன் ஆச்சரியமுற்று "இப்படியும் நமது ஆற்றலையுணராது ஓர் அற்பக் குரங்கு நம்மை அவமானப் படுத்துமே யானால் பிறகு நமது பராக்கிரமந்தானென்ன? அஞ்சி யிருந்த மும்மூர்த்திகளும் இச்செய்கையால் நம்மை அலட்சியம் செய்வாரன்றோ? ஆகா நமது வல்லமையே வல்லமை! நம்மை அகௌரவஞ்செய்ய இதனினும் வேறு இழிதொழிலுண்டோ?" என்று ஆயாசமுற் றான். இந்தச் சிறுகுரங்கின் அகங்காரத்தை அகற்ற நமது சேனைகளால் ஆகவில்லையோ வென்று கர்ஜித் தான். உடனே அநேக கிங்கரர்கள் ஆஞ்சநேயரைச் சூழ்ந்து கொண்டார்கள். (வரும்)

# சத்தியமே ஜெயம்

முன்னொரு காலத்தில் ராஜபுதனத்தை வீரசிங்கன் என்னுமொரு மன்னன் ஆண்டு வந்தான். அவன் மிகவும் தாழ்ந்த குலத்திலிருந்து இராஜ பதவிக்கு வந்தவன்; ஜாதியில் இடையன்; தன்னுடைய புத்தியினாலும் பராக்கிரமத்தினாலும் இப்பதவிக்கு வந்தான்.

இவன் தன்னைப்போல் பிறரும் சுகம் அனுபவிக்கத் தக்க சௌகரியங்களை ஏற்படுத்தி நீதி தவறாமல் அரசு புரிந்து வந்தான். கஷ்டப்பட்டவர்களுக்குத்தானே சுகத்தின் அருமை தெரியும்? நல்ல குணமுடையவர்களையும் வித்வான்களையும் ஆதரித்தும், துஷ்டர்களைக் கண்டித்தும் வந்தான். இப்படியிருந்தும் வீரசிங்கன்மேல் அறிவீனர் சிலர்க்கு அசூயை உண்டாயிற்று. ஏனெனில், இடையனும் இப்பதவிக்கு வந்துவிட்டானே என்பதுதான். நமது வீரசிங்கன் பாஞ்சால தேசத்தில் மன்னாதி மன்னனாக விளங்கிய ஜயசிங் என்பவனுக்கு அடங்கி கப்பம் செலுத்தி வந்தான்.

அப்பொழுது ஒரு நாள் குமாரசிங் என்னும் ஓர் ஏழை கதறிக்கொண்டே ராஜசபைக்கு வந்து, “ராஜாதி ராஜனே! நமஸ்கரிக்கின்றேன். நான் மிகவும் ஏழை;

எனக்கு அழகு வாய்ந்த ஒரு மனைவியும், ஒரு குழந்தையும் இருக்கின்றனர். ஒரு கொடிய பாதகன் என் மனைவியின்கற்பை அழிக்கும்பொருட்டு என் வீட்டில் புகுந்து தொந்தரவு செய்கிறான். "காவறுனே பாவையர்க்கழகு" என்று கூறுகிறார்களல்லவா பெரியோர்கள். அதைக் காப்பது நம் கடமையாகையினால் தாங்கள் என்பேரிலும், என் குடும்பத்தின்பேரிலும் தயை கூர்ந்து எங்களைக் காப்பாற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டான்.

**அரசன்** :—அத்துஷ்டன் எப்பொழுது வந்தான்.?

**குமாரசிங்** :—நேற்றுக்கூட வந்து போனான் நாளை இரவு இருபது நாழிகைக்கு வருவதாகச் சொல்லிப் போயிருக்கிறான்.

**அரசன்** : கவனிக்கிறேன். போ என்று அவனை அனுப்பிவிட்டான்.

மறுநாள் இரவு இருபது நாழிகைக்கு முன்பே அரசன் குமாரசிங்கின் வீட்டிற்குப் போய் ஒரு பக்கத்தில் இருந்தான். துஷ்டன் தான் சொல்லிப்போனபடி இருபது நாழிகைக்குக் குமாரசிங்கன் வீட்டிற்கு வந்து கதவைத் தட்டினான். குமாரசிங் கதவைத் திறக்கவில்லை துஷ்டன் கோபங் கொண்டு, "கதவைத்திற ! இல்லாவிட்டால் நாளைய தினம் உன் உயிர் தப்பாது" என்றான். அரசன் அதைக்கேட்டதும் உடனே குமாரஸிங் கைப் பார்த்து "நீ போய் வீட்டில் இருக்கும் தீபத்தை அணைத்து விட்டு அந்தத் துஷ்டனுக்குக் கதவைத் திறந்து விடு. பிற்பாடு நான் வேண்டியதைச் செய்கிறேன்" என்றான். அந்தப் படியே குமாரசிங்கும் சந்தடியின்றிச் செய்தான் ; துஷ்டன் ஸந்தோஷமாய் உள்ளே பிரவே

சித்து, குமாரஸிங் மனைவியை அழைத்தான். அவள் பயந்தாள் அச்சமயம் மன்னன் பின் புறமாகவந்து துஷ்டனைத் தன் கை வாளால் வீசிக் கொன்றுவிட்டான்.

பின்பு மன்னனின் வேண்டு கோளின் மேல் குமாரசிங் தீபத்தை ஏற்ற, மன்னன் கீழே கிடக்கும் சவத்தைப் பார்த்து ஸந்தோஷித்துக் கடவுளை வணங்கினான்.

பின்னர் மன்னவர் அந்தக் குமாரசிங் வீட்டிலேயே கொஞ்சம் ஆகாரம் உண்டார்.

குமாரசிங்.மனைவி :—மன்னவா, நான் இன்று தான் மறு ஜென்ம மெடுத்தேன். தாங்கள் வராதிருந்தால் நான் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு பிராணனை விட்டிருப்பேன். தாங்கள் இவ்வேழையின் மேல் இவ்வளவு அன்பு வைத்து மானத்தைக் காப்பாற்றியதற்குத் தங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேனோ தெரியவில்லை. இந்த ஜன்மத்தில் வந்தனம் தான் அளிக்க முடியும். வேறு என்னால் என்ன முடியும். வந்தனம். வந்தனம்.....என்றாள்.

அரசன் :—ஏ! கற்புக் கரசியே! நான் என்னுடைய கடமையைச் செய்தேனே ஒழிய வேறொன்றும் செய்யவில்லை. இது என்னுடைய கடமையை ஒழிய உபகாரம் ஒன்றுமில்லை. கைம்மாறு செய்ய முடியவில்லையே என்று வருத்தப் பட வேண்டாம்.

குமாரசிங் :—மன்னவா தாங்கள் செய்த பெரும் உதவிக்கு வந்தன மளிக்கிறேன். தாங்கள் தயை கூர்ந்து நான் கேட்பதற்குப் பதிலளிக்க வேண்டும்.

அரசன் :—அப்படியே ஆகட்டும், பயப்படாதே சொல்லு. ஆனால் நீ சொல்லப் போவது இன்னதென்று

எனக்குத் தெரியும். இருந்தாலும் சொல்லு பார்ப்போம்.

குமாரசிங் —தாங்கள் முதலில் தீபத்தை அணைக்கும்படி உத்தரவிட்டதன் காரணமென்ன வென்று எனக்குத் தெரியவில்லை.

அரசன் :—அவ்வளவு தானா? இன்னும் ஏதாவது உண்டா?

குமாரசிங் :....பிறகு சவத்தைப் பார்த்து முதலில் ஸந்தோஷித்துப் பின்பு கடவுளை வணங்கியதன் காரணமும் தெரிய விரும்புகிறேன்.

அரசன் :—குமரா! நான் சொல்லுவதைக் கவனித்துக் கேள் :—இக் கொடூரமான செயல்களைச் செய்யத் துணிந்தவர் பெரும் உத்தியோகத்தி லிருப்பவர்களாக இருந்தாலும் இருக்கலாம் அன்றி என்னை அண்டிய பந்துக்களாக இருந்தாலும் இருக்கலாம். ஆனபடியால், கொலைசெய்வதற்கு முன், எனக்கு அறிந்தவனைக் காணப்பட்டால் அத்தருணத்தில் எனக்கு நியாயம் எது என்பதைமறந்து தெரிந்தவர்களைக் கொல்ல மனம் அஞ்சுமோ என்பதற்காக அஞ்சி விளக்கை அணைக்கச் சொன்னேன்.

பிறகு சவத்தைப் பார்த்து ஸந்தோஷித்துக் கடவுளைத் தியானித்தது எதற்காகவெனில் சவமாய்க் கிடந்தவர் என் பந்து வல்ல என்று கண்டேன். அதைக் கண்டு ஸந்தோஷமடைந்தேன். அப்படி என் பந்துவாய் இல்லாததினால் தான் என் மானம் தக்கியது என்று கடவுளை வணங்கினேன்" என்று சொல்லி முடித்து விட்டு அரண்மனை சென்றான்.

வீரசிங் இப்படி முறை தவறாமல் செங்கோல்

செலுத்திய போதிலும் அவன் மேல் குற்றம் சொல்லச் சில உத்தியோகஸ்தர்கள் துணிந்தார்கள். ஆனால் வீரசிங் அதைப் பாராட்டவில்லை.

தினந்தோறும் வீரசிங் வெகு நாளாய்த் தான் பாதுகாத்துவரும் ஒரு பெட்டியைத் திறந்து பார்த்து விட்டு அதை வணங்கிய பிற்பாடுதான் வேறு வேலைகளைக் கவனிப்பான். ஆனால் அப் பெட்டியில் யாதிருக்கிறது என்று மற்றவர்களுக்கு தெரியாது. பெட்டியைக் கண்டவுடனே வீரசிங் மனம் பூரிப்பது வழக்கம். அவனுடைய செங்கோலுக்குக் காரணமே அப்பெட்டியி லுள்ள வஸ்துதான்.

அரசாங்கத்தில் வேலை செய்து வந்த சில துஷ்டர்கள் நமது வீரசிங் மேல் பொறாமை கொண்டு பாஞ்சால அரசனுக்கு பொய்ப் பிராது பின் வருமாறு அனுப்பினார்கள் :—

"மன்னாதி மன்னரே! தாங்கள் தர்மத்திற்கும், சத்தியத்திற்கும் அஞ்சிச் செங்கோல் செலுத்துவது வாஸ்தவமே. ஆனாலும் தங்களது அடிமை அரசராகிய வீரசிங் மன்னர் மேலுக்கு நல்லவர் போல் காணப்படுகிறாரே ஒழிய உண்மையில் அவர் வாங்கும் லஞ்சம் கணக்கு வழக்கிலடங்காது. அவர் ஒரு பெட்டியை வெகு நாளாய் வைத்திருக்கிறார். அப்பெட்டியை அவர் எங்கும் பின்னோடே கொண்டு போகிறார். பெட்டியிலிருப்பதை யாவருக்கும் காண்பிப்பதில்லை. ஆனால் பெட்டியைத்திறந்த வுடனே அவர் இருக்கும் இடம் சூரிய வெளிச்சத்திற்கு மேல் பிரகாசிக்கிறது. லஞ்சம் வாங்கியதை வைரமாகவும், தங்கப்பாள மாகவும் சேகரித்து

வைத்திருக்கிறார் என்பதற்கு ஐயமே இல்லை. அதற்கு சாக்ஷியம் கையொப்பமிட்டிருக்கிற தங்களது அன்பார்ந்த அடிமைச் சேவகர்களாகிய நாங்களே. தாங்கள் தயை கூர்ந்து இது விஷயமாய்த் துப்பு விசாரித்து சத்தியத்தை நிலை நாட்டும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்."

இதைப் பார்த்தவுடன் பாஞ்சால மன்னனுக்கு முதலில் நம்பிக்கை ஏற்படவில்லை. பிற்பாடு கொஞ்சம் சந்தேகங் கொண்டு "நீங்கள் முறையிட்டுக் கொள்வது அவ்வளவு வாஸ்தவமாகத் தோன்றவில்லை. இருந்தபோதிலும் என் கடமையைச் செலுத்த இன்னும் ஒரு வாரத்திற்குள் அங்கு வந்து வீரசிங் மன்னனை திடீரென்று காண்கிறேன். பிறகு சபை கூட்டி உண்மையை வெளிக்குக் கொண்டுவருகிறேன். இது இரகஸ்யமாயிருக்கட்டும்" என்று பதில் கடிதம் எழுதினான்.

இராஜபுதனத்தின் இராஜாங்க உத்தியோகஸ்தர்கள் இப்பதிலைக்கண்டவுடன் மனம் களித்து இறுமாப் படைந்தனர்.

பாஞ்சால அரசனாகிய ஜயசிங், கொஞ்ச நாள் சென்ற பிறகு திடீரென்று வீரசிங்கைக் காண வந்தான். வீரசிங் வெகு வணக்கமாய் ராஜாதி ராஜனுக்குச் செய்ய வேண்டிய உபசாரங்களை வழக்கம் போல் செய்து விட்டுத் தன்னுடைய சபையையும் கூட்டினான்.

ஜயசிங் :—என் அன்பார்ந்த வீரசிங்கே! மிக்க சந்தோஷம், சத்தியத்திலும் யோக்கியதையிலும் என்னைப் போலவன் நீ ஒருவன் தான் என்று எண்ணியுமிருந்தேன்; இன்னும் எண்ணுகிறேன். ஆனால் இந்த முறைப்பாட்டைப் பார்க்க வருத்தமாயிருக்கிறது. அது

எவ்வளவு வரையில் உண்மையோ கடவுளுக்குத் தான் தெரியும். நெருப்பில்லாமல் புகை கிளம்பாது என்பது நம்பத்தக்க தாகையால் இதில் ஏதாவது கொஞ்சம் உண்மை தானிருக்கு மென்று எண்ணுகிறேன். இதைப் பற்றி என்ன சொல்லுகிறாய்?'' என்று சொல்லிக் கொண்டே விஷயத்தைத் தெரிவித்தான்.

வீரசிங்:—பிரபுவே, தாங்கள் என் பேரில் இவ்வெண்ணங்கள் கொண்டது என்னுடைய போராத காலமே. எனக்கு அது விஷயமாய் இந்தக்ஷணம் வரையில் ஒன்றுமே தெரியாது. எந்தப் பாபிகள் இம்மாதிரி எழுதினாரோ தெரியவில்லை. அப்பாபிகள் என்னையே நேரில் கேட்டிருந்தால் அவர்களுக்குச் சரியான உத்திரவாதம் அளித்திருப்பேன். அன்றியும் என் மேல் முன் இருந்தற்கு மேல் நம்பிக்கை அதிகம் ஏற்படும்படி செய்திருப்பேனே. அவர்கள் கேட்காததும் என் போதாத காலம் தான். இதோ குதிரையின் பக்கத்திலேயே பெட்டியைக் கட்டித் தொங்க விட்டிருக்கிறேன். அது எப்பொழுதும் என் அருகிலேயே இருப்பது வழக்கம். ஆனால் அதனுடைய மர்மம் என்னைத் தவிர மற்றவர்களுக்குத் தெரியாது. அம்மர்மத்தை இன்று தான் இப்பெரும் கூட்டத்தின் முன்பாக வெளியிடப் றேன். (இதற்குள்ளே சேவகன் பெட்டியை மன்னர்கள் முன்பாக கொண்டு வந்து வைத்தான்).

மன்னாதி மன்னரே, பெட்டியை பரிசோதிக்கு முன்பாக பெட்டியின் உண்மையான மர்மத்தைத் தீர அறிந்து கொள்ளுங்கள். இதோ அப் பெட்டியின் சாவி. நான் எல்லாம் சொல்லி முடித்தபிறகு பெட்டி

யைத் திறந்து பரிசோதித்துப் பாருங்கள். என்று சொல்லிச் சாவியை நீட்டினான்.

அரசே! நான் ஆட்டிடையன் வம்சத்திலிருந்து படிப்படியாக இப்பதவியை வகித்து வருவது யாவருக்கும் தெரிந்த விஷயமே. முன் என் வம்சத்தார் ஆடுகளுக்கு மன்னராக விளங்கியது போல் நான் இம்மானிடருக்கு மன்னனாக விளங்குவது எல்லாம் வல்ல ஈசனின் கிருபையாலும் தங்களுடைய அநுக்கிரகத்தாலுமே, அன்றி வேறில்லை. தாங்கள் கூறியது போல் இன்று வரை சத்தியத்தையே நிலை நாட்டி வந்தேன்; சத்தியத்தையே நிலை நாட்டி வருகிறேன்; சத்தியத்தையே இன்னும் நிலை நாட்டி வருவதற் கேற்ற புத்தி மதியையும் கடவுள் எனக்கு அநுக்கிரகம் செய்வார் என்பதும் திண்ணமே. நான் மிகவும் இழிவான குலத்திலிருந்து கடவுளின் அநுக்கிரகத்தால் இப்பதவியை அடைந்ததின் காரணார்த்தமாக இப் பெட்டியை வைத்திருக்கிறேன். இப் பெட்டி தான் என் பதவிக்கும், சத்தியத்திற்கும், நன்மைக்கும் காரணமாகும். இப் பெட்டியை நான் காப்பாற்றுதிருக்கும் பக்ஷத்தில் ஜனங்களுக்கு நல்லவனாக இருந்திருக்க மாட்டேன் என்பதும் திண்ணம். ஆனால் பெட்டியிலுள்ள வஸ்துவைப் பார்த்தால் என்னை ஏளனம் செய்வீர்கள். 'குலாம் காதருக்கும், கோகிலா அஷ்டமிக்கும் என்ன சம்பந்தம்' என்பீர்கள், அப் பெட்டியிலோ நான் ஏழை ஆட்டிடையனாய் இருந்த பொழுது கட்டி வந்த கந்தை வஸ்திரம் தானிருக்கிறது. நான் மேம் பதவியைத்தான் அடைவோம் என்ற ஒரு அசட்டு தைரியத்தால் அதைக் காப்

பாற்றினேன். ஆனால் நான் கொண்டது அசட்டு தைரி யம் இல்லாமல் அசல் தைரியமாகவே முடிந்தது. என் பதவிக்கு அத்துணி தான் ஆதரவு என்று, குல தெய் வத்தை ஆதரிப்பது போல் அதை ஆதரித்து வருகி றேன். பெட்டியைத் திறந்து பார்த்தால் உண்மை வெளி ப்படும். பிறகு என்னை என்ன தண்டனைக்கு ஆளாக்கி னாலும் அதை வகிக்க சித்தமாயிருக்கிறேன்." என்றான்.

ஜயசிங் பெட்டியை திறந்து பார்த்ததில் வீரசிங் சொன்னது வாஸ்தவம் என்று கண்டான். பிறகு அக் கந்தையை யாவருக்கும் காண்பித்து, "வீரசிங்கே உன்னை மெச்சினேன். நீ சொல்லுவதும் வாஸ்தவமே. ஆனால் அக் கந்தையால் உனக்கு உபயோகம் என்ன என்பதை தெளிவாகச் சொல் பார்ப்போம்"—என்றான்.

வீரசிங் :—இதைக் கேட்க மறந்துவிடுகிறீர்களோ என்றிருந்தேன். தாங்கள் கேட்டது பற்றி மிகவும் சந்தோஷப்படுகிறேன். அதன் விவரத்தைச் சொல்லு கிறேன் நிதானித்துக் கேளுங்கள்—

மன்னவா! கந்தையைக் கண்டவுடன் டாம்பீகமே எனக்கு உண்டாவதில்லை. ஏழைகளைத் தான் அவசியம் காப்பாற்ற வேண்டும் என்கிற ஞாபகம் வருகிறபடியால் அதையும் நடத்திவருகிறேன். மேலும் சத்தியத் தையே நிலைநாட்டி வந்தால் என்னைப் போல் கீழ் பதவியி லிருந்து மேல்பதவிக்கு வருவது திண்ணம். சத்தி யமே பேசியும் கஷ்டம் வந்தாலும் பாதகமில்லை. நமது அரிச்சந்திரனைக் காட்டிலுமா கஷ்டம் உண்டாகப் போகி றது. இல்லவே இல்லை. என்றான்.

இதைக் கேட்ட யாவரும் ஆச்சரியமடைந்து நமது

வீரசிங்கத்தைப் புகழ்ந்தார்கள். பொய் மனு போட்டவருக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. ஜயசிங் நமது வீர சிங்கை ஆலிங்கனம் செய்து விட்டுத் தமது அரண் மனை சென்றார்.

குழந்தைகளே! இக்கதை நமக்கு போதிப்பதென்ன? ஸ்திரீகளுக்குக் கற்புதான் பிரதானமென்பதும், எப்பதவியை அடைந்த போதிலும் அதிக டாம்பீகம் உதவாது. ஸத்தியத்தையே நிலை நாட்ட வேண்டும். என்பதும் ஏழைகளுக்குக் கூடிய வரையில் உதவி புரிய வேண்டும். உண்மையைக் கண்டு பிடித்துக் குற்றவாளியை யாதொரு வித்தியாஸமில்லாமல் தண்டிக்க வேண்டியது அரசனின் கடமை என்பதுமே.

வி. என். சுப்ரமண்யன்.

சுபம்.

---

## அறநெறி வெண்பா.

(360-ம் பக்கத் தொடர்ச்சி.)

குஞ்சரத்தை வீதிதனில் குக்கல்க ருலைக்கும்
குஞ்சரமு மாங்கதுபோல் கூர்த்தறியா—நெஞ்சின்மிகக்
கோபித்துத் தான்பிளிறில் கோதுறுவ தல்லாமல்
மாபழிப்பு நாய்க்குறு மோ மற்று 34

இம்மையின் நற்சுகமும் ஏற்றமில் நீதிகளும்
அம்மையின் நற்சுகமு மாமிவைகள்—மெய்ம்மையதாய்த்
தையல ரால்நேரும் தாங்கா தவர்வெகுளின்
ஐயமின்றிக் கேடுறுவ தாம். 35

குடிகள் விரும்பாத கோனும் குழந்தை
அடிபெயராச் செல்வ மதுவும்—புடைநெருங்கிச்
சேர்தலுடைப் பந்தவில் செல்வமும் இம்மூன்றும்
நேர்மைத்த தன்று நினை. 36

சாகப்போ வானிடத்தில் சார்ந்து பஞ்சிற் பால்பிழிதல்
மோகமுடன் மானமில் மின்னனையார்—தேகமுடன்
சேர்ந்துகவுத் தல்லிவைகள் செப்பின் பிணமதன்மேல்
சார்ந்துகழு குண்பதெனச் சாற்று. 37

பத்தினியும் புத்திரனும் பந்துக்க ளும்மனையும்
நத்தும் ராஜச் செல்வ நன்மைகளும்—நித்தியமோ?
காலன் வந்தா லென்னுங், கண்ணியனே, நாளுநற்
சீலமுடன் நற்றருமஞ் செய். 38

ஈனந் தனைப் போக்கி யென்னாளும் மாந்தர்க்கு
ஞானந் தனைமேன் மேல் நல்குவித்து—வானுயர்ந்த
கானமதிற் கல்வியென்றும் காரணனைக் காட்டுவித்து
மோனமுறச் செய்வ தென்றும் முன். 39

நன்றுதய பாயதுகாண் நாடுருவ நாளின்று
நின்று நல்ல வேலைதனை நீ நடத்து—சென்று சென்று
போயிடுமே கால மெல்லாம் போகாதிங் கென்னாளும்
மேயிடுவ நற்கரும மே. 40

[illegible]ரையும் தேர்ந்த கொடை யாளியையும் சீதூக்கின்
ம[illegible]னும் வண்மையுளான் தேசுடையான்—தேவர்கள்
அம்மாவென் றூற்று தவத் தாற்கொடுப்பர், மற்றிவனோ
சும்மா யிருக்கத் தரும். 41

நத்துமுயர் செல்வமதும் நாடிடுநல் வில்லாளும்
வித்தகன்றாள் பத்தியதும் மேவலன்றிச்—சித்தம்
அகங்கனிந்து வந்தவருக் கன்னமதை யிட்டார்க்
கிகபரத்தும் நன்மை யுண்டா மெண். 42

கல்வியில் ஞானங் கொடுக்கும் கல்வியதே யுத்தமமாம்
பல்வகையும வேந்தனன்பு புண்புளதாம்—பல்லோ
ரறைவதினும் ஞான அனுபவமாம் யார்க்கும்
குறைவின்றி யீதல் குணம். 43

பெண்டிர்கள் மெச்சுவதும் பெணுநிதி சேர்வதுவும்
மண்டு யுத்தத் திற்செயமே மேவுவதும்—தண்கடல்சூழ்
மேதினியி லெந்நாளு மேதகுதெய் வச்சித்த
மாதியின்றி யாமோ வறை.

வெந்ததனை வித்தாய் விளைத்துண்டார் யாருமிலை
வெந்ததனைத் தானம் விளைத்திட்டு—வந்ததனைக்
கொண்டுண்டு வாழ்குநரைக், காணுதல் கூடுமிதைக்
கண்டு கொண்டு நாளுங் கொடு. 45

## குலவழக்கத்தைக் கொற்றவனாலும் போக்குவதரிது.

உறையூரில் வஞ்சிப்பத்தனென்றொரு பொற்கொல்லன் இருந்தான். அவன் பொற்கலன்களையும் மற்றப் பொன் பாத்திரங்களையும் செய்வதில் மிகவும் பெயர் பெற்றவன். குலவழக்கப்படி அவன் தன்னிடம் வேலைக்கெனக் கொடுத்திருக்கும் பொன்னில் சிறிதளவாயினும் அபகரியாமலிரான். அவனை எவ்வளவு பெயர்கள் காவல் காத்தாலும் அவன் அவ்வளவு பெயர்கள் கண்களிலும் மண்ணையள்ளிப் போட்டுப் பொன்னை அபகரித்துவிடுவான். இந்தத் தொழிலில் இவனடைந்த கீர்த்தி நாடெங்கும் பரவியது. பின் இது காவலன் காதிற்கும் எட்டியது. அவ்வூர் அரசன் அவன் அவ்வாறு அபகரித்துச் செல்வதை வெறுத்தாலும், அவனது ஆச்சரியமான தந்திரத்திற்கு மெச்சி, அவனைப் பரீக்ஷிக்க எண்ணி, உடனே அவனைத் தன்முன் வரவழைத்து, "பத்தா! நீ எனக்கொரு தங்கக் குடம் செய்து கொடுத்தல் வேண்டும். நான் கொடுக்கும் பொன்னோ மாசற்றது; மாற்றுயர்ந்தது; கலப்பில்லாதது. அதிலிருந்து நீ கொஞ்சம் திருடவாவது அல்லது அதனுடன் மாற்றுக் குறைந்த பொன்னைக் கலக்கவாவது கூடாது. அப்படி நீ ஏதாவது மோசம் செய்ததாகத் தெரிந்தால் உன் தலையைக் கொய்துவிடுவேன்" என்று கட்டளையிட்டுப் பொற்குடத்திற்கு வேண்டிய பொன்னைக் கொடுத்து கடுமையான காவலையும் வைத்து, அரண்மனையிலேயே அவ்வேலையை நடத்தச் சொன்னான்.

நாட்கள் பல சென்றன. வஞ்சிப்பத்தன் அக்காவலாளிகளுக்குப் பயந்தபடியால் கொஞ்சம் பொன் கூடத்

திருட முடியவில்லை. அதனால் அவன் மிகவும் வருந்தினான். பின் ஒரு நாள் ஒரு யோசனை அவன் மனத்திலுதித்தது. அதனால் அவன் முகம் மலர்ந்தது. உடனே ஓர் அறைக்குள்ளே போய்க் கனமான ஓர் உலோகத்தையெடுத்து, அரண்மனையிற் செய்துவரும் குடத்தைப் போலவே செய்யவாரம்பித்தான். சிறிது நாட்களில் அரண்மனையிலும் குடம் செய்து முடிந்தது; வீட்டிலும் அதே மாதிரியான குடம் செய்து முடிந்தது. வீட்டிற் செய்த குடத்திற்குத் தங்க முலாம் பூசித் தங்கக்குடமே போற் செய்து விட்டான்.

புதிதாக ஒரு குடம் செய்தால் அந்தக் குடத்தை உபயோகத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு முன், அதைச் செய்த தட்டானே ஆற்றிற்குச் சென்று அக்குடத்தில் நிறையத் தண்ணீர் கொண்டுவருவது வழக்கம். அவ்வழக்கப்படியே பத்தன் யானையொன்றின் மீதேறிப் போய் ஆற்றை யடைந்து ஸ்நாநம் செய்து, குடத்தில் நிறையத் தண்ணீரை மொண்டுகொண்டு அரண்மனை வந்து சேர்ந்தான். அரசனும் குடத்தில் யாதொரு வித்தியாசத்தையும் காணாததால், பத்தனது தந்திரம் தன்னிடம் செல்லவில்லை யென்பதை மனத்தில் எண்ணிக்கொண்டு சந்தோஷப்பட்டான். அவனுக்குச் சேரவேண்டிய கூலியையும் கொடுத்து அனுப்பிவிட்டான். பத்தனும் ஒருவித வருத்தமுமில்லாமல் தன் வீட்டையடைந்தான்.

பல நாட்கள் கழிந்ததும் அரசன் தட்டானை வரவழைத்து, "பத்தா! உன்னை எல்லோரும் மிகவும் தந்திரி என்று புகழ்ந்தார்கள். என் விஷயத்தில் உன் தந்திரம் உன்னைக் கைவிட்டு விட்டது" என்று சொல்லிச் சிரித்தான். அதற்கு அப்பத்தனும் வாய் திறவாமற் புன்முறுவல் பூக்க, அச்சிரிப்பின் காரணமறியாத,

அரசன்:—ஏ! பத்தா! நீ வருந்தவேண்டியிருக்க ஏன் சிரித்தாய்?

வஞ்சிப்பத்தன் :—அரசே! கோபிக்கக்கூடாது. தாங்கள் வருத்தப்படுவதற்குப் பதிலாக சிரிப்பதைக் காண எனக்கும் நகைப்புண்டாகிறது.

அரசன் :—நான் ஏன் வருத்தப்படவேண்டும்?

பத்தன் :—நான் நிஜத்தைச் சொன்னால் என்னை ஒன்றும் செய்கின்றதில்லை யென்று உறுதிகூறினால் சொல்லுகிறேன்.

அரசன் :—நீ பயப்படாமல் சொல். உன்னை யொன்றும் செய்வதில்லை.

பத்தன் :—நான் தங்களிடம் கொடுத்த குடத்தைக் கொண்டுவரச் சொல்லுங்கள்.

உடனே அரசன் கட்டளையின்படி அக்குடம் கொண்டு வரப்பட்டது. பத்தன் அதைக் கையில் வாங்கி, கீழே தேய்த்தான். மேலிருந்த பொன் பூலாம் தேய்ந்து இரும்பு காணப்பட்டது. அதைக் காண அரசன் அடங்கா ஆச்சரியமடைந்து "பத்ரா! நீ புகழிற்குரியவன். விழித்த கண் விழித்தபடியே யிருக்கையிலும், உருவிய வாள் கையிலேயே யிருக்கையிலும் நீ எவ்வாறு இக்காரியத்தைச் செய்தாய்?" என்று கேட்டான். அதற்குப் பத்தன் "அண்ணலே! தங்களது கருத்தை யுணர்ந்து கொண்ட யான் இந்தக் குடத்தை வீட்டிற் செய்து முடித்து, பொற்குடத்திற்கும் இக்குடத்திற்கும் கொஞ்சமும் வித்தியாசம் இல்லாமற் செய்தேன். பின் ஆற்றிற்கு வழக்கம்போல் போகும் தினத்திற்கு முந்திய தினமே அவ்விடத்தில் இதைக் கொண்டுபோய்த் தண்ணீரினுள் மறைத்து வைத்துவிட்டேன். மறுநாள் அக்குடத்துடன் சென்றபோது, அதை அவ்விடம் வைத்துவிட்டு இதைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டேன். அப்பொற்குடம் என் வீட்டிலுள்ளது" என்று சொல்ல அரசன் பத்தர்களிடமாத்திரம் தன் பலம் செல்லாது என்பதையறிந்து கொண்டு, அக்குடத்தை அவனுக்கே பரிசாகக் கொடுத்துவிட்டான்.



ஸ்ரீ ராமதீர்த்த ஸ்வாமிகள்.